துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சைதை தொகுதி 172வது வார்டு காமராஜபுரம் பகுதியில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் சென்னை அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர்கள் சிகிச்சை அளித்த மருத்துவ முகாமினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைத்து சிகிச்சைக்கு வந்த பயனாளர்களுக்கு ஆர்லிக்ஸ், பிரட் மற்றும் பிஸ்கட் பாக்கெட்டுகளை வழங்கினார், நிகழ்ச்சியில் எஸ்.குணசேகரன், இ.முருகேசன், நேருநகர் எஸ்.பாடாசா, வே.முருகன், ஜி.செல்வராஜ், க.உமாபதி, ஜி.யோவான், வே.ரமேஷ்குமார், எஸ்.ராஜேந்திரன், பி.பி.நாகராஜ், தி.வழிவிட்டான் , ஜி.குணசேகர், சி.எச்.பென்சிலய்யா, உள்ளிட்ட வட்ட நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

தலைமைச் செயலகத்தில் நேற்று (09.12.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் 12.12.2024 முதல் 19.12.2024 வரை நடைபெறவுள்ள 22வது சென்னை சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் ரூபாய் 85 இலட்சத்திற்கான காசோலையினை இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் பொதுச் செயலாளரும், சென்னை சர்வதேச திரைப்பட விழா இயக்குநருமான ஏ.வி.எம்.சண்முகம் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர்கள் மு.பா.அன்புச்சோழன் (மக்கள் தொடர்பு), எஸ்.செல்வராஜ் (செய்தி), இந்திய திரைப்பட திறனாய்வுக் கழகத்தின் தலைவர் சிவன் கண்ணன், துணைத் தலைவர் ஆனந்த் ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தஞ்சை தொகுதியில்

தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முன்மொழிந்துள்ளதா?

நாடாளுமன்ற மக்களவையில் ச.முரசொலி கேள்வி!

தஞ்சாவூர் . டிச. 10 – தஞ்சை தொகுதியில் தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு முன்மொழிந் துள்ளதா? என நாடாளுமன்றத்தில் ச.முரசொலி எம்.பி. கேட்ட கேள்விக்கு மத்திய மந்திரி பதில் அளித்துள்ளார்.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தின் போது கேள்வி நேரத்தில் ச.முரசொலி எம்.பி. பேசினார். அப்போது ஒன்றிய அரசின் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திட்டத்தின் நிலை என்ன?தஞ்சை நாடாளுமன்ற தொகுதியில் தேசிய அளவிலான திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசு ஏதேனும் முன்மொழிந்து ள்ளதா? இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அறிவியல், தொழில்நுட்ப மற்றும் புவி அறிவியல் துறை துணை மந்திரி ஜிதேந்திர சிங் பதில் அளித்து கூறுகையில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப திட்டம் செயல்படுகிறது. அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்திற்கான சூழலை மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம். இதற்கான நிதி உதவியும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆறுவிதமான நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் மூலம் மாவட்ட வாரியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. கடந்த 3 ஆண்டுகளில் தமிழ் நாட்டிற்கு ரூ.34 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தஞ்சை தொகுதியில் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்திற்கு மட்டும் ரூ.6 கோடியே 58 லட்சம் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரிக்கு ரூ.30.17 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. சிறுதானியங்கள் குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகதஞ்சையில் உள்ள தேசிய உணவு தொழில்நுட்பயியல், தொழில் முனைவுமற்றும்மேலாண்மை நிறுவ னத்திற்கு ரூ.86.95 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தேசிய அறிவியல் தினம் மற்றும் தேசிய கணித தினம் கொண்டாடுவதற்காகநிதி வழங்கப்படுகிறது.

பயோடெக்னாலஜி துறையில்எட்டுகோடியே 96 லட்சம் மதிப்பில் திட்டங்களுக்கு நிதியளிக்கப் பட்டுள்ளது. பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி மற்றும் புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி) ஆகிய கல்லூரி களுக்கும் ரூ.2 கோடியே 49 லட்சமும்வழங்கப் பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மாதவரம் தொகுதி 26வது வார்டு

அசிசி நகரில் மேல்நிலை மின் கம்பிகள் புதைவடங்களாக மாற்றியமைக்கப்படுமா?

பேரவையில் மாதவரம் எஸ்.சுதர்சனம் கேள்வி!

சென்னை, டிச.10

பேரவையில் கேள்வி நேரத்தின் போது மாதவரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மாதவரம் சுதர்சனம், மாதவரம் தொகுதி அசிசி நகரில் மேல் நிலை மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

மாதவரம் எஸ். சுதர்சனம்: மாதவரம் தொகுதி, மண்டலம்-III, 26-வது வார்டு, அசிசி நகரில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் செந்தில்பாலாஜி: மாதவரம் தொகுதி, மண்டலம்-III, வார்டு எண் 26, அசிசி நகரில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளை, பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாதவரம் எஸ்.சுதர்சனம்: மாதவரம் தொகுதி, மண்டலம்-III-ல் உள்ள அனைத்து மாநகராட்சி வார்டுகளிலும் மேல் நிலை மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றுவதற்கு ஒப்பந்தம் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அமைச்சர் அவர்கள் அளித்த பதில் மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. அதற்காக, முதல்வர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, மாதவரம் தொகுதிக்குட்பட்ட மண்டலம்-II-ல் உள்ள மாநகராட்சி வார்டுகள் 15, 16, 17 மற்றும் 19 ஆகியவற்றிலுள்ள மேல்நிலை மின் கம்பிகளையும் புதைவடங்களாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் என்னவென்றால், மழைக் காலங்களில், வார்டுகள் 15, 16, 17 மற்றும் 19 ஆகியவற்றில் பூண்டி ஏரியிலிருந்து திறக்கப்படும் உபரி நீர், கொசஸ்தலை ஆற்றின் வழியாக வந்து அப்பகுதியில் வெள்ளம் ஏற்படுகிறது. மேலும், புழல் ஏரியிலிருந்து திறக்கப்படும் உபரி நீரும் சேர்ந்து, சுமார் 8 அடி உயரத்திற்கு நீர் தேங்கி நிற்கிறது. முதல்வர் அவர்களும், துணை முதல்வர் அவர்களும் அந்தப் பகுதிகளையெல்லாம் பார்வையிட்டுச் சென்றிருப்பதால், அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகவே, அந்த வார்டுகளிலும் மேல்நிலை மின் கம்பிகளை புதைவடங்களாக மாற்றித் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு மாற்றித் தரப்படுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் வி.செந்தில் பாலாஜி: சென்னையில் பெரம்பூர், ஆவடி, அடையாறு, IT Corridor மற்றும் தாம்பரம் ஆகிய 5 கோட்டங்களிலுள்ள பகுதிகளில், மேல்நிலை மின்கம்பிகளை பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 7 கோட்டங்களில் அந்தப் புதைவடங்களாக மாற்றுவதற்கான ஒப்பந்தம் கோரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் மாதவரம் தொகுதிக்குட்பட்ட அனைத்து வார்டுகளும் இடம் பெற்றிருக்கிறது.

மாதவரம் எஸ். சுதர்சனம்: மாதவரம் தொகுதிக்குட்பட்ட, சோழவரம் ஒன்றியத்தில் உள்ள பாடியநல்லூர் ஊராட்சியில், 50 சென்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதிலே 110 KV துணை மின் நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் பரிமாற்றம் செய்யக் கோரியது. அதன் அடிப்படையில் மேற்கூறிய 50 சென்ட் நிலத்தில், நிலம் மேய்க்கால் நிலம் என்பதால் அதற்குச் சமமான நிலத்தை பொன்னேரி வட்டம், கோளூர் கிராமத்தில் தேர்வு செய்து, அதற்கான நில மதிப்பீடு செய்து, நிலங்களுக்கு புலதணிக்கை செய்து, 2021 ஆம் ஆண்டு நில நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இன்னும் நிலமாற்றம் செய்யப்படவில்லை. அப்பகுதி மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்க தகுந்த நடிவடிக்கை எடுத்து துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா?.

அதேபோன்று மாதவரம் தோல் தொழிற்பேட்டையில் 33/11 kV துணை மின் நிலையத்தில் உள்ள இரண்டு 8 MAV மின்மாற்றிகளில், ஒன்று 16 MAV மின்மாற்றியாக உயர்த்தப்பட்டுள்ளது. மற்றொரு மின் மாற்றியையும் 8 MAV-யிலிருந்து 16 MAV ஆக திறன் உயர்த்தப்பட வேண்டும்.

மணலி மற்றும் மணலி புது நகர் பகுதிக்கு கூடுதல் 33/11 kV துணை மின் நிலையம் அமைப்பதற்கு சேலைவாயலிலுள்ள CMWSSB வளாகத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விடத்தில் ஒரு 33/11 kV துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா?

அதேபோன்று, புழல் சூரப்பட்டு பகுதியில் புதிய 23/11 kV துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று–இவைகளெல்லாம் அதி முக்கியமானவை. நிச்சயமாக மின்சாரம் சீராகக் கிடைப்பதற்கு வழிவகை செய்யும். இவைகளையும் அமைத்துத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் வி. செந்தில்பாலாஜி: மாதவரம் சட்டமன்றத் தொகுதியில், 4 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, அதில் 3 துணை மின் நிலையங்களுக்கு இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ஒப்படைப்பு வழங்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கக்கூடிய ஒரு துணை மின் நிலையத்திற்கு இடங்கள் விரைவாகப் பெறுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. மேலும் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்ற அந்தப் பல்வேறு கோரிக்கைகள் துறையின் சார்பாக அதிகாரிகளை அனுப்பி, ஆய்வு செய்து, தேவை ஏற்படின் இந்த ஆண்டு முன்னுரிமை அடிப்படையில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மயிலை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் 08.12.2024 அன்று மதியம் 1.00 மணியளவில் சென்மேரிஸ் பாலம் மந்தவெளி ரயில்வே ஸ்டேஷன் அருகில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு 500 நபர்களுக்கு பிரியாணி மற்றும் துப்புரவு பணியாளர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மயிலை பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, வட்ட செயலாளர் மூ.இராஜேந்திரன், மாவட்ட அமைப்பாளர் சிஐடி நகர் ஆர்.குமரன், பகுதி துணை செயலாளர்கள் பாக்யதாஸ், அகல்யா விஸ்வநாதன், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் மா .சுதாகர், ஏ.சிறை செல்வன், ஆ.ரவி பகுதி அமைப்பாளர் மோ.தனசேகர், சீ.வி.திவான் குமார் , பகுதி துணை அமைப்பாளர்கள் மற்றும் 123 அ வட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பகுதி துணை அமைப்பாளர் எஸ்.வி.மணிகண்டன் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்.

கடலூரில் பெஞ்சல் புயல் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தலைமை தாங்கி நாணமேடு, உச்சிமேடு, குண்டு உப்பலவாடி, தாழங்குடா, கண்டக்காடு, குறிஞ்சி நகர், வெளிசெம்மண்டலம், நத்தப்பட்டு, கோண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு 30 லட்சம் மதிப்பிலான புடவை, அரிசி, போர்வை, கைலி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கி ஆறுதல் கூறினர். அதுபோது கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தி மதியழகன், காந்தாமணி கண்ணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் லட்சுமணன், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரவி ராஜ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், நிர்வாகிகள் அண்ணாதுரை, வேணு, ரவி, ரங்கநாதன், பரத், அசோகன், சங்கர், அன்பழகன், தேவநாதன் உட்பட கழக தோழர்கள் பலர் உடன் இருந்தனர்.

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் – அகில இந்திய

சித்தா ஆராய்ச்சி - மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவ திட்டம் உள்ளதா?

மக்களவையில் கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 10 – தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவ ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா? மக்களவையில் வேலூர் நாடாளுமன்றத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இது குறித்து மக்களவையில் அவரது கேள்வி வருமாறு:-

ஆயுஷ் பார்மா பூங்காவை நிறுவுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் கொள்கையை வகுத்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்,

தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவுவதற்கு ஒன்றிய அரசிடம் ஏதேனும் முன்மொழிவு உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள்: மற்றும் கடந்த ஐந்தாண்டுகளில் சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகளின் வளர்ச்சிக்காக தமிழகத்திற்கு ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி எவ்வளவு? என கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஸ்ரீ பிரதாப் ராவ் ஜாதவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டில் ஆயுஷ் பார்மா பூங்காவை நிறுவுவதற்கு ஒன்றிய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தில் கொள்கை எதுவும் உருவாக்கப்படவில்லை.

மேலும் தமிழ்நாட்டில் எய்ம்ஸ் மாதிரியில் அகில இந்திய சித்தா ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவ தற்போது திட்டம் எதுவும் ஆயுஷ் அமைச்சகத்தின் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகளின் மேம்பாட்டிற்காக ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு, சென்னையில் தேசிய சித்த நிறுவனத்தை (NIS) நிறுவியுள்ளது. தமிழ்நாட்டில் அமைந்துள்ள CCRS இன் பின் வரும் புற நிறுவனங் கள் / அலகுகள்:

i. சித்த மத்திய ஆராய்ச்சி நிறுவனம். சென்னை.

ii. சித்த மருத்துவ ஆராய்ச்சி பிரிவு, பாளையங்கோட்டை.

iii சித்த மருத்துவ தாவரங்கள் தோட்டம், மேட்டூர் அணை.

ஆயுஷ் அமைச்சகம் தமிழ்நாடு உள்ளிட்ட மாநில/யூனியன் பிரதேச அரசுகள் மூலம் தேசிய ஆயுஷ் இயக்கத்தின் (NAM) மத்திய நிதியுதவி திட்டத்தை செயல்படுத்தி பல்வேறு நடவடிக்கைகளின் கீழ் நிதி உதவி வழங்குவதன் மூலம் நாட்டில் சித்த மருத்துவ முறை உட்பட ஆயுஷ் முறையை ஒட்டுமொத்த மேம்பாடு மற்றும் ஊக்குவிப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது. NAM வழிகாட்டுதல்களின் விதி களின்படி மாநில வருடாந்திர செயல் திட்டங்கள் (SAAPS) மூலம் பெறப்பட்ட அவர்களின் முன்மொழிவு களுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில அரசு சித்த மருத்துவ முறை மற்றும் சித்த மருந்துகள் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு NAM திட்டத்தின் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.

ஆயுஷ் அமைச்சகம் ஆயுஷ் மருந்துகளின் தரத்தை உயர்த்துவதற்கான மத்தியத் துறைத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. ஆயுஷ் மருந்தகங்கள் மற்றும் மருந்து பரிசோதனை ஆய்வகங்களை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை AOGUSY திட்டத்தின் கீழ் உள்ள கூறுகளில் ஒன்றாகும். தமிழக அரசு இந்த கூறுகளின் கீழ் நிதியைப் பெற்றுள்ளது.

CCRS தலைமையகம் மற்றும் அதன் தமிழ்நாடு மற்றும் NIS இல் உள்ள அதன் புற நிறுவனங்கள்/அலகுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் NAM திட்டம் மற்றும் AOGUSY திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்கப்பட்ட நிதி கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு வாரியாக இணைப்பு I இல் கொடுக்கப்பட்டுள்ளது.

அதன் படி கடந்த ஐந்து ஆண்டுகளில் CCRS தலைமையகத்துக்கு ரூ. 154.53 கோடியும் தேசிய சித்த நிறுவனத்துக்கு ரூ. 270.31 கோடியும் NAM திட்டம் மற்றும் AOGUSY திட்டத்தின் கீழ் ரூ. 140.20 கோடியும் என மொத்தம் ரூ. 565.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.

கடலூரில் ஃபெஞ்சல் புயல்

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள்!

கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

கடலூர், டிச. 10 – கடலூரில் ஃபெஞ்சல் புயல் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆலோசனைப்படி, நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

இதில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ. ஐயப்பன், டாக்டர் பிரவீன் ஐயப்பன் தலைமை தாங்கி நாணமேடு, உச்சிமேடு, குண்டு உப்பலவாடி, தாழங்குடா, கண்டக்காடு, குறிஞ்சி நகர், வெளிசெம்மண்டலம், நத்தப்பட்டு, கோண்டூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 5 ஆயிரம் குடும்பங்களுக்கு 30 லட்சம் மதிப்பிலான புடவை, அரிசி, போர்வை, கைலி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கி ஆறுதல் கூறினர்.

அப்போது கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆதி பெருமாள், ரவிச்சந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், ஊராட்சி மன்றத் தலைவர்கள் சாந்தி மதியழகன், காந்தாமணி கண்ணன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் லட்சுமணன், துணைத் தலைவர் சாந்தி பழனிவேல்,

முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரவி ராஜ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சுதாகர், நிர்வாகிகள் அண்ணாதுரை, வேணு, ரவி, ரங்கநாதன், பரத், அசோகன், சங்கர், அன்பழகன், தேவநாதன் உட்பட கழக தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

அப்போது கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ. கூறுகையில், பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் அனைவருக்கும் தொடர்ந்து நிவாரண உதவிகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி மேட்டுக்குப்பம் எழில் நகர் பகுதியில் 195 வது வட்டத்தின் சார்பாக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு உதயநிதி உதய நாள் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரும் மாவட்ட கழக செயலாளருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி வட்ட செயலாளர் மாமன்ற உறுப்பினர் க.ஏகாம்பரம் தலைமையிலும் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மத்திய பகுதி செயலாளர் ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. மண்டல குழு தலைவர் வி.எ.மதியழகன் தலைமை பொதுக் குழு உறுப்பினர் எம்.கே. ஏழுமலை முன்னிலையிலும் கழக பேச்சாளர் கவிஞர் கோலூர் வீரமணி மற்றும் கி.ரேஷ்மா சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர்கள் த.விஸ்வநாதன், மு.மனோகரன் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா.அருண்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.வீ.தியாகராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ஜி.சங்கர் அ.முருகேசன், வ.பாபு பகுதி கழக வட்டக் கழக அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

மயிலை கிழக்கு பகுதி 124 அ வட்ட தி.மு.க சார்பில் கழக இளைஞரணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல் படி 124அ வட்ட கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு தலைமையில், மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் கழக கொடியேற்றி புதிய கல்வெட்டு திறந்து வைத்து அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி, திருமதி கீதா முரளி எம்.சி., திருமதி அ. ரேவதி, எஸ்.முனுசாமி .சீமென் சேகர், மூ.உதயசூரியன், ஸ்டோன் வீ.அருண்குமார், என்.வி.லோகநாதன், என்.வடிவேல், வட்டக் கழக நிர்வாகிகள் கு.வீரபத்திரன், மு.சரவணன், வெ.சரண்ராஜ், என்.நதியா, பிரஸ் கே.ரவிகுமார், சி.எஸ். நந்தகுமார், ஜி.கே.கௌதம், கே.கண்ணன், அட்வாகேட் ஜோதிகுமார், சே.விவேக்ராஜன், இ.கணேசன், இளவழகன், எம்.ஜி.பி.பிரேம்குமார், டி.என்.ஆதி, எஸ்.ஜோசப், எஸ்.சீனு, ஆர்.தயாளன், இ.கோகுல், என்.வி.தீபக், தங்கநாபார், ஏ.சாந்தி, வி.ஹேமத்குமார், ச. பிரேம்குமார், எஸ்.ராஜா, ஜே.சூரி, தினேஷ், ஜெயராமன், டி.தணிகாசலம், கோமளா, மஞ்சுளா, ஜமுனா, பி.ஆர்.தேவி, ஏ.காளத்தி, டி.தயானந்தம், பாரிஸ் ஆர்ட்ஸ் எல்.ஹென்ரிசுரேஷ், ஜே.குமார், எஸ். பிரபு, ஆர்.சுதன், ஜி.கிருஷ்ணமூர்த்தி, ஜெகநாத், கே.கே.சண்முகம், பி.மாரி, கே. ஆனந்தவேல், சத்தியமூர்த்தி, டி.தண்டபாணி, செண்பகராஜ், வி.பிரபாகரன், எஸ்.மகேஷ், என்.பாலமுருகன், புரட்சிசெல்வம், கண்ணன், ஜானகிராமன், சாய்ரவி, எஸ்.ஜே.ஜோசப், எஸ்.மணி, ஆர்.ராஜேந்திரன், ஜெய்குமார், குமார், சிவகுமார், பொன்கணேசன், கபாலி, சுரேஷ், எம்.அல்ராஜ், டி.ரூப்நாத், ஆ.யோகேஸ்வரன், பி.சுந்தர், பி.ஆர்.அருண், எம்.ஜி.கர்ணன், கே.வாசுதேவன், லாண்டரி பாபு, சாந்தி, ஆர்.சுரேஷ், ஏ.ராஜேஷ், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.